# ஒரு மதிப்பெண் வினாத்தேர்வு

## பத்தாம் வகுப்பு - கணிதம்

### பாடம் - 5 ( தேர்வு - 2 )



தயாரிப்பு : ப. இளங்கோவன்
பட்டதாரி ஆசிரியர் , அரசு மேல்நிலைப் பள்ளி , கோலியனூர். விழுப்புரம் மாவட்டம்

1 (i) $l_1 : 3y = 4x + 5$ (ii) $l_2 : 4y = 3x - 1$ (iii) $l_3 : 4y + 3x = 7$ (iv) $l_4 : 4x + 3y = 2$

எனக் கொடுக்கப்பட்ட நான்கு நேர்கோடுகளுக்குக் கீழ்க்கண்ட கூற்றுகளில் எது உண்மை

(1) $l_1$ மற்றும் $l_2$ செங்குத்தானவை (2) $l_1$ மற்றும் $l_4$ இணையானவை

(3) $l_2$ மற்றும் $l_4$ செங்குத்தானவை (4) $l_2$ மற்றும் $l_3$ இணையானவை

2 $(0,0)$ மற்றும் $(-8,8)$ என்ற புள்ளிகளை இணைக்கும் கோட்டிற்குச் செங்குத்தான கோட்டின் சாய்வு

(1) $-1$ (2) $1$ (3) $\frac{1}{2}$ (4) $-8$

3 $7x - 3y + 4 = 0$ என்ற நேர்கோட்டிற்குச் செங்குத்தாகவும், ஆதிப்புள்ளி வழிச் செல்லும் நேர்கோட்டின் சமன்பாடு

(1) $7x - 3y + 4 = 0$ (2) $3x - 7y + 4 = 0$ (3) $3x + 7y = 0$ (4) $7x - 3y = 0$

4 $(12,3)$, $(4,a)$ என்ற புள்ளிகளை இணைக்கும் கோட்டின் சாய்வு $\frac{1}{8}$ எனில், '$a$' –யின் மதிப்பு.

(1) $1$ (2) $4$ (3) $-5$ (4) $2$

5 $Y$ அச்சில் அமையும் புள்ளி $A$ –யின் செங்குத்துத் தொலைவு $8$ மற்றும் $X$ அச்சில் அமையும் புள்ளி $B$–யின் கிடைமட்டத் தொலைவு $5$ எனில், $AB$ என்ற நேர்கோட்டின் சமன்பாடு

(1) $8x + 5y = 40$ (2) $8x - 5y = 40$ (3) $x = 8$ (4) $y = 5$

6 $x = 11$ எனக் கொடுக்கப்பட்ட நேர்கோட்டின் சமன்பாடானது

(1) $X$ –அச்சுக்கு இணை (2) $Y$ –அச்சுக்கு இணை

(3) ஆதிப் புள்ளி வழிச் செல்லும் (4) $(0,11)$ என்ற புள்ளி வழிச் செல்லும்

LIVEWORKSHEETS

7 $8y = 4x + 21$ என்ற நேர்கோட்டின் சமன்பாட்டிற்குக் கீழ்க்கண்டவற்றில் எது உண்மை

(1) சாய்வு $0.5$ மற்றும் $y$ வெட்டுத்துண்டு $2.6$

(2) சாய்வு 5 மற்றும் $y$ வெட்டுத்துண்டு 1.6

(3) சாய்வு 0.5 மற்றும் $y$ வெட்டுத்துண்டு 1.6

(4) சாய்வு 5 மற்றும் $y$ வெட்டுத்துண்டு 2.6

8 சாய்வைப் பயன்படுத்தி நாற்கரமானது ஓர் இணைகரமாக உள்ளது எனக் கூற நாம் காண வேண்டியவை

(i) இரு பக்கங்களின் சாய்வுகள்

(ii) இரு சோடி எதிர் பக்கங்களின் சாய்வுகள்

(iii) அனைத்துப் பக்கங்களின் நீளங்கள்

(iv) இரு பக்கங்களின் சாய்வுகள் மற்றும் நீளங்கள்

9 $(5,7)$, $(3,p)$ மற்றும் $(6,6)$ என்பன ஒரு கோட்டமைந்தவை எனில், $p$–யின் மதிப்பு

(1) 3 (2) 6 (3) 9 (4) 12

10 ஒரு சுவரின் அருகே நடந்து சென்று கொண்டிருக்கும் ஒரு நபருக்கும் சுவருக்கும் இடையே உள்ள தூரம் $10$ அலகுகள். சுவரை $Y$ –அச்சாகக் கருதினால், அந்த நபர் செல்லும் பாதை என்பது

(1) $x = 10$ (2) $y = 10$ (3) $x = 0$ (4) $y = 0$

LIVEWORKSHEETS